44

# நாட்டுப்புற பாடல்கள் காட்டும் பெண்களின் துன்பங்கள்



**முனைவர். ம. கீதா**
உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயமுத்தூர் - 43.

'பாட்டினைப்போல் இன்பம் பாரின்மிசை இல்லையடா' என்றார் பாரதி ஆனால் நாட்டுப்புறப் பாடலினைப் போல் இன்பம் தருவது எங்குமில்லை. இவைபாடுவோரையும் கேட்போரையும் பரவசப்படுத்துகின்றன. நாட்டுப்புறப் பாடல்களைப் பாடியவர்கள் நாட்டுப்புறத்து மக்களேயாவர். மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை என்ற ஒரு வரையறையோடு நாட்டுப்புறப் பாடல்களின் வகைப்பாட்டினைக் காணலாம். நாட்டுப்புறவியல் துறை இன்று வளர்ந்து வரும் துறையாக விளங்குகிறது. இதில் பல பிரிவுகளும் உட்பிரிவுகளும் காணப்படுகின்றன. சமூகவியல் ஆய்வுக்கும் நாட்டுப்புறவியல் துறை பெரிதும் பயன்படுகிறது. நாட்டுப்புறப் பாடல்கள், மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாட்டுப்பேறுகள், சிந்தனைகள், வேதனைகள், வாழ்க்கைமுறைகள், குடும்ப அமைப்பு, சமயம், நாகரிகம் ஆகியவைகளைப் பிரதிபலிக்கின்றன. இவைகளை ஆராய்ந்தால் அவ்வாழ்க்கை அமைப்பையும் அதில் ஏற்படும் சிக்கல்களையும் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். பெண்களின் சிக்கல்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்களின் நிலை

'நாட்டுப்புறப் பண்பாட்டியல் என்பது கிராமாந்தர மக்களின் அனுபவத்தின் பொக்கிஷம். மனிதனோடு மனிதனை அது நேரடியாக மட்டுமல்லாது இதயத்தோடு இதயத்தைப் பிணைத்து வைக்கின்றது. அவர்களுடைய தனித்தன்மையைக் குலைக்காமல் ஒற்றுமையை வளர்க்கின்றது. இயற்கையோடு இயைந்து வாழும் சமூகத்தின் ஒட்டு மொத்தமான அல்லது தனிப்பட்ட உணர்ச்சிகளை அது பிரதிபலிக்கின்றது' என்று கூறுகிறார் திரு.சங்கர் சென் குப்தா.

நாட்டுப்புறப் பாடல்கள் நம்முடனே உலவுகின்ற பாமரமக்களின் நேரடியான வாழ்க்கைத் திறத்தைப் புலப்படுத்துகின்றன. எந்த ஓர் அலங்காரப் பூச்சுமற்ற நாட்டுப்புறப் பெண்கள் போன்றவை நாட்டுப்புறப் பாடல்கள். ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் சமுதாயத்தில்



ஆணிற்கு இருக்கும் மதிப்பு பெண்ணிற்கு இல்லை. பத்து மாதம் சுமந்த குழந்தை ஆணாக இருந்தால் ஒரு விதமாகவும் பெண்ணாக இருந்தால் வேறு விதமாகவும் பெற்ற தாயே வளர்க்கும்படியான கொடுமை காலங்காலமாக இம்மண்ணில் நிலவி வருகின்றது. துன்பப்படுவதற்கென்றே இம் மண்ணில் பிறக்கின்ற ஒரு ஜந்துவாகப் பெண் பிறவி கருதப்படுகின்றாள். நடைமுறையிலும் இக்கருத்தே செயல்படுகின்றது.

## பெண் அடிமைத்தனம்

இன்றைய சமூக அமைப்பு பெண்களை அடிமைப்படுத்தும் சமூக அமைப்பாக உள்ளது. பெண்களின் சுதந்திரமும், உரிமைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. அவைகள் சமுதாயத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. நமது தமிழ்ச் சமுதாயத்தில் பெண் சமுதாயம் ஒரு சார்புச் சமுதாயமாகும். ஒரு பெண்ணானவள் தன் வாழ்க்கை முழுதும் யாரையேனும் சார்ந்தே வாழ்கிறாள். பெண்கள் எவ்வாறெல்லாம் அடிமைப்படுத்தப்பட்டு இருந்தனர் என்பதை, 'சிறுவயதில் தந்தையும், பருவத்தில் கணவனும், விதவை நிலையில் மக்களும் காவல் ஆவர். எப்பருவத்தினராயினும் பெண் தன்னிச்சையாய் இயங்கக் கூடாது. தந்தை அல்லது உடன் பிறந்தான் அல்லது கணவனுக்கு வாழ்நாள் எல்லாம் பணிவிடையாற்றுவதே பெண்டீர் கடன்' என்னும் வரிகளில் மனுதர்மம் எடுத்துரைக்கிறது. ஒரு பெண்ணின் வாழ்க்கையில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுமே முடிவில் அவளைத் துன்பப்படுத்துவனவாகவே அமைந்துள்ளது. இத்துன்பங்களை எல்லாம் நீக்கி அவள் வாழும் இன்ப நாட்கள் மிகமிகக் குறைவாகும்.

## இளமை மணம்

நகர்ப்புறங்களில் இருப்பதை விடக் கிராமங்களிலேயே இளமை மணம் மிகவும் அதிகமாக நடைபெறுகிறது. ஆண்களைவிடப் பெண்களுக்கே மிகச் சிறிய வயதில் மணம் முடிக்கின்றனர். பெண்ணைப் பெற்றவுடனேயே பெற்றோர்கள் படுகின்ற பெரிய துன்பம் அவளை ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்பதேயாகும். மகளுக்கு திருமணம் முடிக்கும் மாப்பிள்ளை பணம் படைத்தவனாக இருந்து விட்டால் கேட்கவே வேண்டாம். வறுமைவாய்ப்பட்ட தங்களுக்குப் பிறந்த பெண் ஏதோ கோடீசுவரர் வீட்டிற்குச் சென்று குதூகலமாய் வாழப் போகிறாள் என்று கோட்டைகட்டி, விளையாடும் பருவத்திலே திருமணம் முடித்து வைக்கிறார்கள். திருமணம் முடித்த அந்தப் பெண் தன் துயர நிலையை,

*வெள்ளிக் கொடை பிடிச்சுட நான்*
*விளையாடும் நாளையிலே*
*விசனம் தெரியலையே*
*வெக்கானம் தோணுலியே - இந்த*

*வேசிமுள்ளு ராசருக்கு*
*விரல் கொடுத்த நாள் முதலா*
*விசனம் தெரியுதுங்க*
*வெக்கானம் தோணுதுங்க*

என்று பாடிப் புலம்புவதிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

## பணக்காரருக்கு வாழ்க்கைப்படும் பெண்

ஆடவர்கள் தங்களின் பால் உறவுத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவும், சொத்து உரிமையைக் காத்துக் கொள்வதற்காகவும், சமுதாயத்தில் தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காகவும் வயது முதிர்ந்தவர்கள் இளம் பெண்களை மணந்து கொள்கின்றனர். இப்பொருந்தா மணத்தில் பெண்ணின் அகத்தேவைகள் எப்போதும் நிறைவு செய்யப்படாமலே இருக்கின்றன. பணத்தாசையினால் வயது வேறுபாட்டையும் மறந்து கிழவர்களுக்கு பெண்ணை மணம் முடித்துக் கொடுக்கும் நிலையைப் பார்க்கலாம்.

*'சோளச் சோறு திங்க மாட்டேன்*
*சொன்னபடி கேட்கமாட்டேன்*
*நரைச்ச கிழவங்கிட்ட*
*நானிருந்து வாழமாட்டேன்*
*நாணலுத் தட்டை போல*
*நரைச்ச கிழவனுக்கோ*
*கோவப் பழம் போல*
*குமரி வந்து வாச்சனல்லே!*
*செம்புல சிலை எழுதி*
*செவத்த புள்ள பேரெழுதி*
*வம்புல தாலிகட்டி*
*வாழுறது எந்த விதம்?*
*யானை அணைஞ்ச கையி*
*அருச்சுனரைத் தொட்டகையி*
*பூனையை அணையச் சொல்லி*
*புள்ளி போட்டானே எந்தலையில்'*

என்று அந்தப்பெண் புலம்புவதை நாட்டுப்புறப் பாடல் எடுத்துரைகின்றது.

## மகப்பேறின்மை

மகளிர் வாழ்க்கையில் படுகின்ற துயரங்களிலேயே 'குழந்தையின்மையால்' படுகின்ற துயரம் பெரிதாக இருக்கின்றது. குழந்தைகளைப் பெற்று வளர்ப்பது பெண்களின் தலையாயக் கடமையாகக் கருதப்படுகிறது. ஆண் குழந்தை பெறாத பெண்ணை மலடி என்று சமுதாயம் இழித்துப்பேசுகிறது. மலட்டுத்தனம் ஆணுக்கு இருந்தாலும் பெண்ணே தூற்றப்படுகிறாள். இனம் அழியாமல் இருப்பதற்கும், பெற்றோருக்கு வயதான காலத்தில் உணவளித்துக் காப்பதற்காகவும், தாங்கள் இறந்த பிறகு ஈமச்சடங்குகள்



...தற்காகவும் குழந்தைப் பேறு விரும்பப்படுகிறது. ...யில்லா மனைவாழ்க்கை வீண்' என்று கருதப்படுகிறது. இதை,

*கொன்னை புடிக்கு மின்னு*
*கொலை நெருங்கக்*
*காய்க்கு மின்னு*
*...ா குளிந்தேன் சிலகாலம்*
*கொன்னை புடிக்காமே*
*கொலை நிறைய காய்க்காமே*
*...ா கொடும்பாவி ஆனேனப்பா*

... நாட்டுப்புறப்பாடலின் மூலம் மகப்பேறில்லாத பெண்ணின் ...பத்தை அறிய முடிகின்றது.

## சித்தியின் கொடுமை

அவளுடைய அம்மா தன் பெண்ணை அனாதை போல விட்டுவிட்டு இறந்து போகிறாள். தந்தை இருக்கிறார் ஆனால் தந்தை தாய்க்கு ஈடாக முடியுமா? முடியாது. தந்தை வேறொரு பெண்ணை மணஞ்செய்து கொள்கிறார். தனக்கு சித்தியாக அதாவது மாற்றாந்தாயாக வந்தவள் கொடுமைப்படுத்துகிறாள். தானே வீட்டுக்கு அதிகாரியாக இருக்கவேண்டும் என எண்ணுகிறாள். அதனால் அவளை திருமணம் செய்து கொடுக்க எண்ணுகிறாள். உண்மையான அன்பு செலுத்தும் பெற்ற தாயாக இருந்தால் மகளை மணம் செய்து கொடுக்கும் இடத்தைப்பற்றி நல்ல எண்ணம் கொண்டு மாப்பிள்ளையாகப் போகிறவனின் குணநலன்களை அறிந்த பின்னரே திருமணத்தை நடத்துவாள். ஆனால் அவளுடைய சித்தியோ நல்லெண்ணமில்லாதவளாதலால் அவளை ஒரு நற்குணமில்லாதவனும், நல்ல பழக்கவழக்கம் இல்லாதவனுமாகிய ஒருவனுக்கு மணம் செய்து வைத்து விடுகிறாள். மணமாகிய பின்பு அவள் படும் துன்பங்களையும், இந்தத் திருமணத்திற்குக் காரணமாயிருந்த சித்தியின் கொடுமைகளையும் பற்றிக் குறிப்பிடுகின்றாள்.

*வெங்காயம் வெங்காயம்*
*வதக்கி வச்ச வெங்காயம்*
*செங்கோட்டை அத்தான் மாரு*
*பெண் கேட்டு வந்தாக*
*எங்க ஐயா இளராசா*
*இல்லைண்ணு சொன்னாக*
*எங்கம்மா சண்டாளி*
*இருக்குன்னுஞ் சொன்னாளே*

என்று அந்தப்பெண் புலம்புவதை நாட்டுப்புறப் பாடல் எடுத்துரைக்கின்றது.

## மாமியார் கொடுமை

மாமியார் மருமகள் என்றாலே வேறுபாட்டுணர்ச்சி எங்கிருந்துதான் வந்தடையுமோ, தெரியவில்லை. அன்று முதல் இன்று வரையில்

போராட்டத்திற்கு முடிவே இல்லை. ஒருத்தி தனக்காகக் காசு சேர்க்கப் பருத்திக் கொட்டை ஆட்ட நினைக்கின்றாள். மாமியார் அதைத் தடுக்கத் தன் துயரத்தைச் சினமாக வெளிப்படுத்துகின்றாள். இதனை,

**நாடன் பருத்திக் கொட்டை**
**நானாட்ட முடியலியே**
**நாதேரி முண்டகிட்ட**
**சின்னப்பட முடியலிலே**
**உக்கம் பருத்திக்கொட்ட**
**நானாட்ட முடியலியே**
**ஊதேரி முண்டகிட்ட**
**சின்னப்பட முடியலியே**

என்ற நாட்டுப்புறப் பாடலின் மூலம் அறியலாம்.

## விதவை நிலை

குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய கணவன் இறந்து போனால் மனைவி பெரும் பாதிப்புக்குள்ளாகிறாள். பேரிழப்பை மட்டுமின்றி அமங்கலி என்ற சொல்லையும் தாங்கிக் கொள்ள வேண்டியவளாகிறாள். கணவனைச் சார்ந்து வாழும் நிலை இருப்பதால், அவன் இறந்த பிறகு பெண்ணின் நிலை கேள்விக் குறியாக மாறிவிடுகின்றது. கணவனை இழந்த இழப்பைக் காட்டிலும் கைம்மை நோன்பின் கொடுரம் வேதனைக்குள்ளாக்குகிறது. விதவைகள் எந்தச் சுபகாரியத்திலும் பங்கு பெறக் கூடாது. அவள் தொட்ட காரியம் துலங்காது. எதிரே வந்தால் சகுனத்தடை என்றெல்லாம் சமூகம் நினைக்கிறது. சமூகப் புறக்கணிப்பும், இழிநிலையும் அவளுடைய வாழ்க்கையின அங்கமாக மாறிவிடுகிறது. துன்பமும், வேதனையும், அடிமைத்தனமும் நிறைந்த விதவைகளின் வாழ்க்கை நிலையை ஒப்பாரிப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

**பொன்னு அடுப்பு வச்சு**
**பொங்க வச்சேன் சாதங்கறி**
**பொங்கி வெளியே வந்தா**
**புருசனில்லாப் பாவி என்பார்**
**ஆக்க அடுப்பு முண்டு**
**அனலும் போவ சன்னலுண்டு**
**ஆக்கி வெளியே வந்தா**
**அரசனில்லாப் பாவி என்பார்**

என்ற நாட்டுப்புற ஒப்பாரிப் பாடல் கைம்பெண்ணின் வேதனைநிலையை வெளிப்படுத்துகின்றது.

## நிறைவுரை

பெண்கள் பொருந்தாத திருமணத்தினாலும், மகப்பேறு இல்லாத மலட்டுத் தன்மையாலும், காலங்காலமாக நடக்கும் சித்தி மற்றும் மாமியார் கொடுமையாலும், கணவன் இறப்பதால் ஏற்படும் விதவை



நிலையாலும் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதை நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது. இக்கொடுமைகளை நீக்கி மகளிர் முழுமையான உரிமைகளைப் பெறும் நாளை எதிர்நோக்குவோம். அவற்றிற்கான வளர்ச்சிப்பாதையில் செயல்படுவோம்.